சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 12.10.2022

வா.சா.1 பவுன்ராஜ், த/பெ.பெருமாள்சாமி

(2,7 பிரதிவாதிகளுக்கு போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணைக்கு முன்வராததால் 2,7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 8,9 பிரதிவாதிகள் தரப்பில குறுக்கு விசாரணை</u>

நான் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை மோசடியாக விற்றது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் எனக்கு தனித்த பாத்தியம் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் 1 முதல 6 பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்து பூர்வீக சொத்து. அதில் எனக்கு பங்கு தராமல் விற்றுவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தை பொறுத்து 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு உரிய உரிமை ஆவணங்களை பரிசீரலனை செய்த பின்னர் தான் 8ம் பிரதிவாதி ஆவணங்களை பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றும் அது குறித்து அந்த ஆவணங்களை செல்லாது என கூறுவதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 8,9 பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.